செ.வெ.எண் :62 நாள்:25-07-2017

மாண்புமிகு ஆளுநர் அவர்களை தலைவராக கொண்ட தொகுப்பு நிதி மூலம் தமிழ் நாட்டிலிருந்து இராணுவப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வரும் தகுதியுள்ள முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கீழ்கண்டவாறு விபரப்படி தொகுப்பு மானியம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்கு தேர்வு செய்யப்பட்டு(NDA/IMA/Naval/Air Force Academy)- யில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் முன்னாள் படைவீரர் பிள்ளைகளுக்கு தொகுப்பு மானியம் **(Lump sum Grant ).** | : | ரூ.1,00,000/- |
| 2) | முப்படையில் குறுகிய கால படைத்துறை அலுவலர்(Short Commissiond Officers) பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வரும் முன்னாள் படைவீரர் பிள்ளைகளுக்கு தொகுப்பு மானியம். | : | ரூ.50,000/- |
| 3) | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளின்(Junior Commissioned Officers and Other Ranks) பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வரும் முன்னாள் படைவீரர் பிள்ளைகளுக்கு தொகுப்பு மானியம். | : | ரூ.25,000/- |

இராணுவத்தில் பணியில் சேர்ந்து பயிற்சி பெற்றுவரும் கரூர் மாவட்டத்தைச்

சார்ந்த முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகள் இத்திட்டத்தின் கீழ்தொகுப்பு மானியம்

பெற்றிட அதற்க்கான உரிய விண்ணப்பப் படிவங்களை திருச்சிராப்பள்ளி மாவட்ட

முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அசல் படைவிலகல்

சான்றுடன் நேரில் அணுகி பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**